# 11

# மரம் வளர்ப்போம்

சிறிய நகரம் ஒன்று, அதன் நடுவே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. வெள்ளம் கரைபுரண்டு வரும்போல் இருக்கின்றது. ஐந்தாறு சிறுவர்கள் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எப்படி அவ்வளவு தண்ணீர் வருகிறது என்று ஆச்சரியமும், அறிய ஆவலும் கொள்கின்றனர். அப்போது அங்கே ஒரு முதியவர் வருகிறார். அவரிடம் தங்கள் சந்தேகத்தைக் கூறுகின்றனர்.



முதியவர் : குழந்தைகளே! ஆற்றின் அருகே ஒருவரும் போகாதீர்கள். சற்றுத் தொலைவில் பாதுகாப்பாக நில்லுங்கள்.

விமல் : தாத்தா, இவ்வளவு தண்ணீர் எங்கிருந்து வருகின்றது ?

முதியவர் : பருவ மழை பெய்திருப்பதால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது.

ரவி : இவ்விடத்தில் மழை குறைவாகத்தானே பெய்தது?

தாத்தா : ஆறு வெகு தொலைவிலிருந்து ஓடி வருவதைப் பாருங்கள். அது ஓடி வரும் வழியில் பலத்த மழை பெய்துள்ளது.

விமல் : நூறு கிலோ மீட்டர் தூரத்திற்குப் அப்பால் தானே மழை பெய்துள்ளது. எப்படி இவ்விடத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது? ஆச்சரியமாக இருக்கிறதே.

ரவி : தண்ணீர் சேறு நிறைந்து காணப்படுகிறது.

விமல் : தாத்தா வெள்ளப் பெருக்கால் ஏற்படும் தீமைகள் என்ன ?

முதியவர் : வெள்ளப் பெருக்கு மிகவும் அபாயகரமானது. மண்ணரிப்பை உண்டாக்கும். பயிர்களை அழிக்கும். மனிதர்களும் நீரில் அள்ளுண்டு போகும் அபாயம் இருக்கிறது.

ரவி : தாத்தா, கேட்கவே பயமாக இருக்கின்றது. இத்தனை துன்பந் தரும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த முடியாதா?

தாத்தா : எம்மால் முற்றாகத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் சில முன்னேற்பாடுகள் செய்தால் அபாயத்தைத் தவிர்க்கலாம்.

விமல் : அது எப்படி முடியும் தாத்தா ?

முதியவர் : நாம் காடுகளை அழிக்கக் கூடாது. மரங்களை வெட்டக்கூடாது. வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் மரங்களுக்கு உண்டு. மரங்களின் வேர்கள் மண்ணரிப்பைத் தடுத்து நிறுத்துகின்றன.

| | | |
|---|---|---|
| ரவி | : | இப்போது புரிகிறது தாத்தா, மரங்களின் மகத்துவம். |
| விமல் | : | அப்படியானால் நாங்கள் இனிமேல் மரங்களை வெட்டக் கூடாது. அப்படித்தானே தாத்தா ? |
| ரவி | : | மரங்களை வெட்டாமல் விடுவது மட்டுமல்ல, ஏராளமான மரங்களை நட்டு வளர்க்கவும் வேண்டும். |
| முதியவர் | : | நல்லது பிள்ளைகளே, மரம் நடும் இயக்கம் ஒன்றை நாம் ஆரம்பிப்போமா ? |
| விமல்,ரவி | : | நிச்சயமாக, ஆரம்பிப்போம் தாத்தா (இருவரும் விடைபெறுகிறார்கள்) |

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| **முதியவர்** | - | வயோதிபர். |
| **தொலைவு** | - | தூரம். |
| **பலத்த** | - | மிகுந்த. |
| **அபாயகரம்** | - | ஆபத்து. |
| **நிச்சயமாக** | - | கட்டாயமாக. |

## கிரகித்தற் பயிற்சி

**பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்.**

1. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதேன் ?
2. உரையாடலில் எத்தனை பேர் கலந்து கொண்டனர் ?
3. வெள்ளத்தால் ஏற்படும் தீமைகள் இரண்டு கூறுங்கள்.
4. மண்ணரிப்பைத் தடுக்க என்ன செய்யவேண்டும் ?

## செயற்பாடு

**நீங்கள் இன்னொருவருடன், 'மரம் வளர்ப்போம்' என்பது பற்றி உரையாடுங்கள்.**

‘மரம் வளர்ப்போம்’ என்ற தலைப்பில் பேசுங்கள்.

உரையாடலை உணர்வுபூர்வமாக வாசியுங்கள்.

தொனியை வேறுபடுத்தி வாசியுங்கள்.

பொருத்தமான மரபுச் சொற்களை வைத்து எழுதுங்கள்.

## ஒருமை பன்மைச் சொற்கள்

நீங்கள் ஏற்கனவே ஒருமை பன்மைச் சொற்கள் கற்றுள்ளீர்கள். மேலும் பல ஒருமை பன்மைச் சொற்கள் கீழே தரப்படுகின்றன.

| ஒருமை | பன்மை |
| --- | --- |
| ✮ பெயர் | பெயர்கள் |
| ✮ எண் | எண்கள் |
| ✮ இடம் | இடங்கள் |
| ✮ நாடு | நாடுகள் |
| ✮ ஊர் | ஊர்கள் |
| ✮ பெரியார் | பெரியார்கள், பெரியோர்கள் |
| ✮ வாக்கியம் | வாக்கியங்கள் |
| ✮ மாவட்டம் | மாவட்டங்கள் |
| ✮ மாகாணம் | மாகாணங்கள் |
| ✮ எழுத்தாளன் | எழுத்தாளர்கள் |
| ✮ கவிஞன் | கவிஞர்கள் |
| ✮ பணிப்பாளர் | பணிப்பாளர்கள் |
| ✮ முகாமையாளர் | முகாமையாளர்கள் |

## செயற்பாடு

**பின்வரும் ஒருமைச் சொற்களுக்குப் பன்மை எழுதுங்கள்**

1. எண் ..................................
2. நாடு ..................................
3. ஊர் ..................................
4. பொருள் ..................................
5. வாக்கியம் ..................................
6. சிறுவன் ..................................
7. தீமை ..................................
8. மரம் ..................................
9. காடு ..................................
10. இயக்கம் ..................................

**பின்வரும் கூற்று வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுங்கள்.**

| கூற்றுவாக்கியம் | | வினாவாக்கியம் |
|---|---|---|
| 1. வெள்ளம் வரும் | - | ............................... |
| 2. மண்ணரிப்பு ஏற்படும் | - | ............................... |
| 3. மழை குறைவாய்ப் பெய்தது | - | ............................... |
| 4. பாதுகாப்பாக நிற்க வேண்டும் | - | ............................... |
| 5. பயமாக இருக்கிறது | - | ............................... |

**ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றுங்கள்.**

| ஒருமை வாக்கியம் | பன்மை வாக்கியம் |
|---|---|
| 1.மரம் நடுவேன் | .............................. |
| 2.நான் மரத்தை வெட்டமாட்டேன் | .............................. |
| 3.நான் மரம் நடும் இயக்கம் ஆரம்பிப்பேன் | ............................... |

## ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக்குவோம்.

கிளி உணவு உண்டது.
மாணவி பாட்டுப் பாடினாள்.
நான் கடிதம் அனுப்பினேன்.

மேலேயுள்ளவை ஒருமை வாக்கியங்கள். இவ்வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றும்போது எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அனைத்தும் மாற்றம் அடையும்.

| ஒருமை வாக்கியம் | பன்மை வாக்கியம் |
|---|---|
| கிளி பழம் உண்டது.<br>மாணவி பாட்டுப் பாடினாள்.<br>நான் கடிதம் அனுப்பினேன். | கிளிகள் பழங்கள் உண்டன.<br>மாணவிகள் பாட்டுக்கள் பாடினார்கள்.<br>நாங்கள் கடிதங்கள் அனுப்பினோம். |

**செயற்பாடு**

**பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்கள் ஆக்குங்கள்.**

1. அவன் வந்தான்.
2. கிளி பேசியது.
3. குயில் கூவியது.
4. மயில் ஆடியது.
5. நட்சத்திரம் பிரகாசித்தது.

## கூற்று வாக்கியம்

செய்தியைக் கூறும் நோக்குடன் அல்லது ஓர் உண்மையை உறுதிப்படுத்திக் கூறும் நோக்குடன் அமைவது, கூற்று வாக்கியமாகும்.

உதாரணம் : அனுராதா பரிசு பெற்றாள்.

## வினா வாக்கியம்

ஒரு கருத்தை அறியும் நோக்குடன் வினவுவதாக அமைவது, வினா வாக்கியமாகும்.

உதாரணம்: கண்ணன் பாடினானா ?

## பழமொழிகள்

நம் முன்னோர் தமது அனுபவத்தைப் பழமொழிகள் மூலம் வெளியிட்டனர் பழமொழிகளைக் கலந்து எழுதும்போதும் பேசும்போதும் மொழி அழகு பெறுகிறது.

- ☆ **அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.**
  முகத் தோற்றம் மன இயல்பைத் தெரிவிக்கும்.

- ☆ **ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
  சிறுவயதில் திருந்தாதவர்கள் வயது சென்ற பின்பும் திருந்தமாட்டார்கள்.

- ☆ **அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.**
  கடந்துபோன காலம் ஒருபோதும் திரும்பிவராது.

- ☆ **ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.**
  முன்கோபம் அறிவைக் கெடுக்கும்.

- ☆ **ஆழம் அறியாமல் காலை விடாதே.**
  ஆராய்ந்து பாராமல் ஒரு செயலையும் செய்யாதே.

**உங்களுக்கு தெரிந்த ஐந்து பழமொழிகளை எழுதுங்கள்.**

## கடிதம் எழுதுவோம்

கடிதங்கள் இருவகைப்படும்: அவை,
உறவுமுறைக் கடிதம்.
தொழில் முறைக் கடிதம்.

## கடிதத்தின் அமைப்பு

- ☆ முகவரி
- ☆ விளிப்பு
- ☆ முடிப்பு
- ☆ ஒப்பம்

## உறவுமுறைக் கடிதம்

உறவுமுறைக் கடிதங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எழுதப்படுபவை அவை பின்வருமாறு அமையலாம்.

45, காலி வீதி,
கொழும்பு 03,
2006.06.27

அன்புள்ள நண்பா,

வணக்கம், நலம். உன் நலமறிய ஆவல் உன் கடிதம் கிடைத்தது. நீ நேர்முகத் தேர்வுக்காகக் கொழும்புக்கு வருவது அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். நீ கொழும்பில் என்னுடன் தங்கலாம். வருவதற்கு முன் எனக்கு அறிவித்து விட்டு வா. நான் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு வந்து உன்னை வீட்டிற்கு அழைத்து வருவேன்.

வீட்டில் உன் அப்பா, அம்மா, தம்பி, தங்கை அனைவரையும் நான் விசாரித்ததாகக் கூறு. உன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பேன். இப்போது உன்னிடமிருந்து விடை பெறுகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள நண்பன்,
அமுதன்

## செயற்பாடு

உங்கள் நண்பர் உடல் நலமற்று மருத்துவமனையில் உள்ளார். அவர் வெகு தொலைவில் இருப்பதால் நேரில் செல்ல முடியாதுள்ளது. அவரது நலம் கேட்டு கடிதம் எழுதுங்கள்.

## தொழில் முறைக் கடிதம்

தொழில் முறையான கடிதங்கள் எழுதப்படும் சந்தர்ப்பங்கள்

(அ) ஓர் அரசாங்க, அரசாங்கம் அல்லாத அல்லது தனியார் அமைப்பு அல்லது நிறுவனத்திற்கு நாங்கள் எழுதுபவை. இவை வேண்டுகோளாக, முறைப்பாடுகளாக, பாராட்டுத் தெரிவிப்பவைகளாக அமையலாம்.

(ஆ) மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு எழுதப்படும் கடிதங்கள்.

**உதாரணம் :** 14, சுமணராம வீதி,
தெகிவளை,
2006/07/01

மாநகர சபை ஆணையாளர்,
தெகிவளை - கல்கிசை மாநகர சபை,
தெகிவளை.

ஐயா/அம்மா,

### குப்பைகூளம் அகற்றப்படாமை பற்றிய முறைப்பாடு

நான் உங்கள் மாநகரசபைப் பிரதேசத்துக்குள் உள்ள மேற்குறிப்பிட்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ் வீதியெங்கும் குப்பை கூளங்கள் குவிந்து கிடக்கின்றன. இதன் விளைவாகத் துர்நாற்றம் வீசுகிறது. நுளம்புத் தொல்லையும் பெருகிவிட்டது.

அதனால், தயவு செய்து குப்பைகூளங்களை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
உங்கள் உண்மையுள்ள,
நிமால்

மேலே தரப்பட்டுள்ள இரு கடிதங்களுக்கும் இடையேயான வேறுபாட்டை அவதானியுங்கள்.

## செயற்பாடு

**பஸ்போக்குவரத்தின் சீர்கேடு பற்றிப் பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுங்கள்**

## விளம்பரம்

சிறு வாக்கியங்களில் அமைய வேண்டும் கவர்ச்சிகரமானதாக இருக்க வேண்டும்.

| |
|---|
| **சிறுவர்களே!**<br>சேமியுங்கள்! இன்றே சேமியுங்கள்!!<br>உங்கள் எதிர்கால வாழ்வு வளம்பெறச் சேமியுங்கள்!!!<br>**இலங்கை வங்கி** |

## செயற்பாடு

**உங்கள் பாடசாலையில் நடைபெறும் கைப்பணிப் பொருட்காட்சிக்கும் விற்பனைக்கும் விளம்பரம் எழுதுங்கள்.**

## படிவங்களைப் பூர்த்தி செய்தல்

நாங்கள் அன்றாட வாழ்வில் பூர்த்தி செய்ய வேண்டிய படிவங்கள் பல அவற்றுள் சில....

* தந்திப் படிவம்
* பணவைப்புப் படிவம்
* பணம் மீளப் பெறும் படிவம்

## கீழே தரப்பட்டுள்ள வங்கிப் படிவங்கள் எவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று அவதானியுங்கள்.



NSB
ජාතික ඉතිරිකිරීමේ බැංකුව
தேசிய சேமிப்பு வங்கி
National Savings Bank

ඉතිරිකිරීමේ මුදල් ආපසු ගැනීමේ පත්‍රය
சேமிப்பிலிருந்து பணம் மீள எடுத்தல்
SAVINGS WITHDRAWAL FORM

දිනය / திகதி / Date: 2006-08-15

ගිණුම් අංකය / கணக்கு இல. / Account No.

ගිණුම්කරුගේ නම / கணக்காளரின் பெயர் / Name of Account Holder: செல்வி தமயந்தி நவரத்ன

ආපසු ගන්නා මුදල (අකුරෙන්) රු. / எடுக்கும் தொகை (எழுத்தில்) ரூபா / Amount of Withdrawal (in words) Rs.: இரண்டாயிரம்

ඉහත සඳහන් මුදල ගිණුමට හර කරන්න.
மேற்படி தொகையை எனது கணக்கில் பற்று வைக்கவும்.
Please debit the above sum to my account.

රු. / ரூபா / Rs.: 2,000/-

தமயந்தி நவரட்ன
අත්සන/கையொப்பம்/Signature

මෙම ඉරට පහලින් කිසිවක් නොලියන්න  இக்கோட்டுக்கு கீழே எதுவும் எழுத வேண்டாம்  DO NOT WRITE ANYTHING BELOW THIS LINE



NSB
ජාතික ඉතිරි කිරීමේ බැංකුව  මුදල් තැන්පත් පත්‍රිකාව
தேசிய சேமிப்பு வங்கிக் காசு வைப்புத் துண்டு
NATIONAL SAVINGS BANK CASH DEPOSIT SLIP

සී.එල්.ජී.1 சீ.எல்.ஜீ.1 C.L.G.1

දිනය / திகதி / Date: 2006-08-15

| | | | | |
|---|---|---|---|---|
| පාස්පොත නිකුත් කළ කාර්යාලය / வைப்புப் புத்தகம் வழங்கிய அலுவலகம் / OFFICE OF ISSUE OF PASS BOOK | தலைமை | පාස් පොතේ අංකය (මුලකුරු සමග) / வைப்புப் புத்தக இலக்கம் (முதலெழுத்துடன்) / PASS BOOK NO. WITH PREFIX | U | 786235 |
| ගිණුම් අයිතිකරුගේ නම සහ වර්තමාන ලිපිනය / கணக்கு வைத்திருப்பவரின் பெயரும் தற்போதைய முகவரியும் / NAME AND PRESENT ADDRESS OF THE ACCOUNT HOLDER | சந்திரபால இலங்கக்கோன்<br>42, துறைமுக வீதி | | | |
| තැන්පත් මුදල (අකුරෙන්) / வைப்புத் தொகை (எழுத்தில்) / AMOUNT OF DEPOSIT (IN WORDS) | ரூபாய் ஐயாயிரம் மட்டும் | රු. / ரூபா / Rs. | 5,000/- | |
| මුදල් බාරගත් නිලධාරියාගේ අත්සන / பணம் பெறும் அலுவலரின் ஒப்பம் / SIGNATURE OF CASH RECEIVING OFFICER | දින මුද්‍රාව - திகதி முத்திரை - DATE STAMP<br>උ.තැ.කා. உ.அ.அ. S.P.O. / පාලන තැ.කා. க.அ.அ. CONT.P.O. | පාස්පොතේ ශේෂය / வைப்புப் புத்தக மீதி / PASS BOOK BALANCE | ச. இலங்கக்கோன்<br>තැන්පත්කරුගේ අත්සන / வைப்பாளரின் ஒப்பம் / DEPOSITOR'S SIGNATURE | |

ජාතික ඉතිරිකිරීමේ බැංකුව - ඔබේ පවුලේ බැංකුව - தேசிய சேமிப்பு வங்கி - உங்கள் குடும்ப வங்கி - NATIONAL SAVINGS BANK - YOUR FAMILY BANK

PRINTED AT HUMALI

## அழைப்பிதழ்

**உதாரணம்:**

வண : திரு/திருமதி/செல்வி ................................ அவர்கட்கு,
இடம் : கதிரேசன் மண்டபம் - பம்பலப்பிட்டி
நேரம்: பி.ப. 5 மணி
திகதி : 2006.07.01
பிரதம விருந்தினர் கலாநிதி க. கலைவாணன்.

எங்கள் மகாவித்தியாலயக் கலைவிழாவிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன். அழைக்கிறோம்.

**விழாக் குழுவினர்,**
**தமிழ். ம. வி.**
**வெள்ளவத்தை.**